ஓலை 42 | ஓசை 146 | ஜூன் 2023

# அகர முதல இலக்கிய பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

நிர்வாக குழு

கு.செல்வமுத்துக்குமரன்

சிவம் அறக்கட்டளை

ஆசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

அ.வில்சன்

அலுவலக முகவரி

எண்.2 அய்யரப்பர் மேலவீதி, பெரியகண்ணாரத்தெரு

திருவாரூர் மெயின் ரோடு, மயிலாடுதுறை.

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

அகர முதல

உரக்க சொல்வோம்

# தினம் ஒரு திருக்குறள்



**விழுப்பேற்றின் அ:.தொப்பது இல்லையார் மாட்டும்**
**அழுக்காற்றின் அன்மை பெறின்.**

யாரிடத்திலும் பொறாமை இல்லாதிருக்கப் பெற்றால்,
ஒருவன் பெறத்தக்க மேம்பாடான பேறுகளில் அதற்கு ஒப்பானது
வேறொன்றும் இல்லை.

**Translation:**

If man can learn to envy none on earth,
'Tis richest gift, -beyond compare its worth.

**Explanation:**

Amongst all attainable excellence
there is none equal to that of being free
from envy towards others.


/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# பேசுக

ஒன்று பேசிட விரும்பினால் அனைவருமிங்கு
ஒன்றென சொல்லும் " யாதுமூரே யாவரும்கேளிர்"
என்றநன்றை பேசுங்களது தென்றலாய் உலவட்டுமெங்கும்!

இரண்டு பேசிட விரும்பினால் பேசுகவது
இரண்டடித் திருக்குறளாய் இருக்கட்டும் எப்போதும்;
வள்ளுவனார் சொல்லிய ஒப்பற்ற திருக்குறளை
வாழுமிந்த வாழ்வில்பழி வந்துசேரா திருக்க
ஓதியும் பேசியும் பின்பற்றி வாழ்கவே!



மூன்றுபேசிட விரும்பினால் பேசலாம் பேசுமது
மும்மூன்று நற்கருத்துக்களை தனக்குள் கொண்ட
திரிகடுகமாய் இருந்தால் நலம்பயக்கும் உமக்கது
தந்திடும் நல்வாழ்வு நானிலம் போற்றும்படியே!

நாலு பேசிட விருப்பமென்றால் பேசுங்களது
நாலடியாராய் என்றுமிருந்திட வேண்டும் பாருங்கள்;
காலன் காலடியில் வந்தாலும் கலங்காத
காதல்வந்திடும் அறவாழ்வு வாழ அகிலத்திலே!

ஐந்து பேசிட விரும்பிவிட்டால் பேசலாமென்றும்
ஐங்குறுநூறு ஐம்பெருங் காப்பியம் எல்லாம்;
அவையியம்பிய நற்கருத்தை நாளும் எல்லோருக்கும்
அவரதையுணர அருந்தமிழில் எடுத்து இயம்புங்கள்!

ஆறு பேசிட விரும்பினால் பேசுங்களது
ஆறுபடை வீடுகொண்ட திருமுருகனின் புகழ்பாடும்
திருமுருகாற்றுப் படைகூறும் நற்பலகருத்தாய் இருக்கட்டுமது
திருப்பிவிடும் கேட்போரைத்திருக் குமரனிருக்கும் இடம்நோக்கி!

ஏழுபேசிட விரும்பினால் பேசுங்களது வள்ளல்களில்கடை
ஏழுவரைப் பற்றிபேசும் பேச்சாய் இருக்கட்டும்;
முடிவற்ற பிறப்பை ஒழித்திட விரும்பினால்
முத்தமிழைப் படியுங்கள்; முத்தமிழை ஓதுங்கள்;
முத்தமிழில் முத்துமுத்தாய்ச் சொல்லெடுத்ததை
முந்தும்சொல் இன்மையறிந்து பேசுங்களென்றும் எப்போதும்!

குறள்: 645
சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து.

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

அகர முதல இலக்கிய பேரவை
அகழும் தமிழே!
முதலும் தமிழே!!

# முடியாத பயணங்கள்

வாழ்க்கைப்பயணத்தில்
தினமும் கற்றல்.
எண்ணத்தில் சிதறும்
நினைவு அலைகள்.

ஏக்கத்தில் புரளும்
ஆக்கம் தேடல்.
மண்ணுக்குள்ளே
மறைந்த வரலாறு.

நெகிழியைக் குறைத்திட
முடியாத பயணங்கள்.
உறவுகளைத் தேடி
உன்னத ஓட்டம்.

அண்டவெளி தேடல்
முடியாத பயணம்.
முடியும் பயணமென்றே
தொடர் வண்டிப்பயணம்.



இடையில் அவசரமாய்
மடைதிறந்த வெள்ளமென
வேறொரு வண்டி
மோதி இடறல்.

விடியலில் முடிய
வேண்டியப் பயணம்
விடியுமுன்னே உயிரை
விரட்டி பிணமாக்கியது.

வாழ்ந்துமுடிய
வேண்டியப் பயணம்
பாதியில் வாழ்க்கையை
முடிக்காத பயணமாக்கி

இன்னலை ஊட்டி
இன்பத்தை அழித்தது.
சாதி வேறுபாடு களையாது
நீதியில் பாகுபாடு.

வாழ்வு முழுவதும்
வஞ்சத்தோடு வலம் வருகை.
வயலில் உழைப்போர்க்கு
வருடம் முழுதும்

வயலோடு வாழ்க்கை
முடியாத பயணமாய்.

கவிஞர் செ.கலைவாணி,மெல்பேர்ன்

# மலட்டு தாய்ப்பாசம்

கூண்டுக்குள் குடி புகுந்து கொண்டேன்.
சிறைக்கம்பிகளே மலர் மஞ்சமென தஞ்சமடைந்தேன்.

எந்த முகங்களின் பாவனைகளும் எட்டிப் பார்க்காமல்
எனை அணைத்துக் கொண்டேன்.

தனிமையும் அதன் தாகமுமே ருசியென புசித்தேன்.
எனக்கென ஒரு கூடு, எனக்கென
ஒரு வானமும் கட்டிக்கொண்டேன்.



அந்த வானத்தில் உன் பிஞ்சு விரல்களே
நட்சத்திரங்களாக அலங்கரித்தன.

ஒன்று, இரண்டு என எண்ணி முடித்தேன்
இருபதாம் எண்ணில்.
அதில் என் விரல்களையும் கோர்த்து.

மிருதுவான உன் மேனி சிதையில்
செல்லரிக்கக் கண்ட கணத்திலிருந்து
எல்லாம் கற்பனையிலேயே கடந்து சென்றது.

கிடைத்த இந்த சிற்றின்பத்தில் உனை வயிற்றில் சுமந்த
பேரின்பம் கரைந்தே விட்டது.

உனையே எண்ணி, உனக்குள் தொலைந்து
மீண்டும் கற்பனையில் கண்டெடுக்கும்
முத்துக்குளிப்பு விளையாட்டில்
நான் மூழ்கியே விட்டேன்.

இப்போது பதுங்குக்குழி ஒன்றும்
பத்திரமாய் கட்டிக் கொண்டேன்.
நேரில் உனை கட்டித்தழுவி வேண்டும் என்ற
விபரீத ஆசையில்.

கவிஞர் மதுகை,திருச்சி

# தேடல்

தொலைந்த என்னை
தேடித் திரிகிறேன்.
எதிர்ப்படும் நபர்களிடம்
என் அடையாளம் நிறம்
உயரம் இன்னும் பிற
இத்தியாதிகளைக் கூறி
வினவுகிறேன்.
என்னைக் கண்டதாகவோ
வழியில் பார்த்ததாகவோ
என்னிடத்தில்
ஒருவரும் சொல்லவேயில்லை.




கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# கருவிலே காதலன்



சலனமாய் நெஞ்சம் தடுமாற
சாங்கியங்களை தகர்த்திட
சாளரம் ஓரமாய்
சங்கீதையும் காத்திருக்க.

மாலை மங்கிய பொழுதில்
பரிதியின் காவி நிறத்தில்
காவியமாய் காட்சியளிக்க.
வாடியே வதனம் மட்டும் தனித்திருக்க.

தூரத்து வண்டி சத்தம்
செவி தட்ட வஞ்சியும் பூத்திட தயாரானவள்.

புன்னகையிலே நறுவீயை காட்டிலும்
மணந்து நின்றாள் மணாளனின் வருகையில்.

மனம் நொந்தவள்
மணமானவளாய் நாணி நகம் கடிக்க.

கயல்விழி மட்டும் தனிமையில்
நின்றதாய் தூதனுப்ப.

காதலன் பணிந்தே
வெள்ளை கொடி நாட்டியே
சிவப்பு முளரியில்
மங்கை மனதை கயவாடினான்.

தேகம் அனலாய் நிற்க
தாயென தலை பதித்தான்

காதலி வயிற்றிலே கன்னம் புதைய
பூவை படிந்தே
மதில் கடிகாரமாய் மாறியே

இறுக்கியே அணைத்து காதலனின்
நெருக்கத்தில் பறந்தாள்
கூண்டு கிளியாய்.

அவன் பிடியில்
ஆசையாய் உணர்ந்தே
அகிலம் மறக்க
ஆவலாய் காதலனை கருவிலே
சுமந்தாளோ!

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# கன்னலாய் இனிக்கிறாய்

மணி முத்தாரமே,மரகத எழிலே
மதி போலே மனதைக் கவர்கிறாய்

மன்மதச் சிரிப்பினில் உள்ளத்தைக் கொல்கிறாய்
மந்திர மாயைகளால் என்னை வெல்கிறாய்

மழலை மொழியாலே மயக்கம் தருகிறாய்
சுட்டித்தனங்களால் சொக்கிப்போக வைக்கிறாய்

சுந்தரவதனம் கொண்ட சுகமான சுமையே
தந்திரங்கள் செய்கின்ற தங்க மகனே

இந்திரலோகத்து இன்பம் தந்தாயே
இதயத்தை அள்ளியே என்னைக் கொய்தாயே

பொக்கை வாய் திறந்து நீயும்
பேசுகின்ற புதுமொழி அறிய

பித்துப் பிடித்து அலைகின்ற பெண்ணாம்
பேதை இவள் உன் தாய்தானே

பிஞ்சு நீயும் தத்தி நடக்கையிலே
பஞ்சுப் பாதம் உனக்கு நோகாதோ?



காய்ந்த பயிருக்குக் கார்மேகம் ஆனாய்
ஓய்ந்திடாத கைகளுக்குள் உலகமாய் வந்தாய்

குழலிசையும் யாழிசையும்
உன் கொஞ்சும் குரலுக்கு ஈடாகுமா?

கவலை களைந்திடும் கண்ணின் மணியே
கன்னலாய் இனிக்கிறாய் உயிரின் உயிரே

கவிஞர் மருத்துவர் ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# மீண்டும் மீண்டும்

பேருந்து நிலையங்கள்
அலுவலக வளாகங்கள்
பொது கழிப்பிடங்கள்
வார சந்தை மைதானங்கள் என
மக்கள் கூடும்
அனைத்து இடங்களிலும்
மருந்து ஊற்றக்
கண்டுபிடிக்கப் பட்ட
பாட்டில்கள்
மதுவினால் நிரப்பப்பட்டு
காலியானதும்
பூமி பந்தின்
ஓரங்களிளெல்லாம்
இந்த
எச்சில் மதுபானப் பாட்டில்கள்
முத்தமிட்டுக் கொண்டிருக்கிறது.



ஒருமுறைக் கூட
பழச்சாறு ஊற்றப் படாமல்
மதுவினால் கரை படும்
காகித குடுவைகள்
கற்பை இழந்த வண்ணம்
காற்றில் பறக்கிறது.

பிறப்பு முதல் இறப்பு வரை
காரியம் ஆரம்பிக்க,
காரியம் நடக்க,
காரியம் முடிக்க என
அவனில்லாமல் அல்ல,
மது இல்லாமல்
அணு இல்லை என்று
நிரூபிக்கப் படுகிறது
மீண்டும் மீண்டும்
உலகம்.

கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

# எண்ணமும் செயலும் ஒன்றிணைந்தால்

வன்மும் துன்பமும் அற்றுப் போகும்
வரும் சரிவு தூரப் போகும்
வற்றாத ஊற்றாய் வெற்றி வரும்
வனத்திலிருந்து வாழ்க்கையில் விடுதலை கிட்டும்

சின்னா பின்னமானது நேராக மாறும்
சிதைந்த உள்ளம் திமிராக நிற்கும்
சிந்திய கண்ணீர் முத்தாக மாறும்
சித்தரித்தவர்கள் தலை குனிந்து நிற்பர்

உலகை வெல்லும் ஆயுதமாய் மாறும்
உறுமிய வாய்களும் தானாக மூடும்
உதாசீனப்படுத்திய கூட்டம் தானாக அடங்கும்
உயர்வு கண்டு எதிர்ப்பு மடங்கும்



விந்தை நிகழ்ந்து கஷ்டம் போக்கும்
விசித்திரமாய் வாழ்வும் ஜொலிக்கும்
விரக்தி அகன்று தெளிவு பிறக்கும்
விஸ்வரூபமாக வெற்றி உரு எடுக்கும்

தன்னம்பிக்கை வேர் ஊன்றி நிற்கும்
தளராத மனம் நிலையாக நிற்கும்
தளர்த்திய எதிரிக்கு பதிலடி கொடுக்கும்
தலைவராய் மண்ணில் அடையாளம் கொடுக்கும்

கவிஞர் ஜஸ்ரா ஜலீல்

# ஒரு புல்லாங்குழல் மௌனமாகிறது

ஒரு மூங்கில் காடு
பற்றி எரிகிறதே.

இசையின் ஓசை
குரல்வளையை நெறிக்க.

மௌனம் கொண்டாடும்
மோகன மொழியில்.



எது என் புல்லாங்குழல்?
என்று தேடுகிறான்.

குயிலும் கானம்
மறந்து சோகமாகிட.

எங்கோ ஓர்
மயான ஒலி ஈனஸ்வரத்தில்

மெல்லிய இளையில்
யாரையோ அழைத்துக்கொண்டிருக்கிறதே.


கவிஞர் இரஜகைநிலவன்,மும்பை

# உதிர்தலும் நலமே

காலையில் மலர்ந்தாலும்,
மாலையில் காற்றோடு
இதழ்களை உதிர்த்திடும்
பன்னீர் ரோஜாவின்
மணத்தைப் போல
வாழக் கற்றிடுவோம்!

பயங்களை உதிர்த்திடுவோம்;
உதிர்த்த இடந்தனில்
நம்பிக்கையை விதைத்திடுவோம்!
துன்பங்களை உதிர்த்திடுவோம்,
புன்னகையை பகிர்ந்திடுவோம்!

பறவை எச்சங்களில் உதிர்ந்திட்ட
விதைகள் தானே முக்கனி
மரங்களாகத் துளிர்த்து வளர்கிறது!
நம்பிக்கை விதைத்திட்ட
நெஞ்சங்களில் தானே
நல்வாழ்வும் சிறக்கிறது!



உதிர்தலும் நலமே!
பூக்களை உதிர்த்து
நல்லாசி வழங்கிடும்
நெடுமரங்களும்,
மீண்டும் பூக்களை
பிறப்பிக்க மறப்பதில்லேயே!

உதிர்ந்தாலும் உரமாகிடுவோம்
மண்ணில் புதைந்தாலும்
மரமாகிடுவோம் !

கவிஞர் மலர் அபி,சிதம்பரம்

# பசுவும் தமிழும்

பசுவும் தமிழும் ஒன்றாகும்
சிசுவுக்கு இரண்டும் மருந்தாகும்.

பாலும் தோலும் உண்டாகும்
வாழும் காலம் நன்றாகும்.

இப்பால் போல் தெள்ளியம்.
முப்பால் கொண்ட வள்ளுவம்.

எக்காலமும் அருந்தலாம் தண்பால்.
தற்காலமும் உயரலாம் தமிழ்ப்பண்பால்




பாலும் தோலும் தருவாள் அன்ன
நாளும் நூல் ஈவாள் உண்ண.

நாற்காலும் வாலும் மொத்தம் ஐந்து
தோற்காமல் தமிழும் ஈந்தாள் உவந்தைந்து.

ஆகாரமாய் பாலூட்டும் பசு போல
சாகாவரமாய் நாளூட்டம் தமிழ்ப்பால் உள.

கவிஞர் மதீரா(அறிவிப்பாளினி),இலங்கை

# அழகிய பொய்கள்

வாழ்ந்திடும் நாளில்
வாய்மையை விரும்பாத
செவிகளில் பாய்ந்திடும்
செந்தேன் வார்த்தைகள்
அழகிய பொய்யாய்
அலங்கரித்து திரியும்

உயிர்களைக் காத்திட
உண்மைகள் பேசிடும்
நாலுமறிந்த மூத்தோர்
நாவும் சொன்னதுண்டு

தீங்குகள் புரிந்திடும்
தீயெனும் பொய்களை
எண்ணத்தில் இருந்து
எண்ணாமல் நீக்கிடு



தவறினை மறைக்க
தவிப்பினில் காட்டிய
ஒப்பனை செய்யாத
ஒய்யார சொற்கள்

மனதைக் கவர்ந்த
மழலையின் மொழியில்
பொய்யென தெரியாமல்
பேசிய வார்த்தைகள்

உள்ளத்தின் ஓரம்
உணர்வென உருவாகி
உயிரினைக் காத்து
உறவினை இணைத்திட

அறியா பருவத்தில்
அரங்கேறிய பொய்கள்
அடுத்தவர் துன்பத்தை
அமைதியாய் துடைத்து
மனதின் வலிகளை மறைத்திடும்
அழகிய பொய்யாய்.

கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# ஹைக்கூ

விலகிச்செல்லும் பாதங்கள்
விடாது பின்தொடர்கின்றன
மனதை பிசையும் நினைவுகள்.

வறண்ட நீர்நிலை
நிதானமாய் கடக்கின்றன
வலசைப் பறவைகள்.

ஆழ்த்துளைக் கிணறு
நீரில் மிதக்கிறது
எட்டிப்பார்க்கும் ஆட்டின் நிழல்.

எறும்புகளின் அணிவகுப்பு
திசை திருப்பியது
சட்டென விழுந்த நீர்த்துளி.

சட்டைப்பை முழுதும்
ஆரஞ்சு மிட்டாய்
பள்ளி செல்லும் குழந்தை.



கவிஞர் ச.கோபிநாத்,சேலம்

# புத்தகத் தோழா

உன்னை தனக்கு பரிசளிப்பவனே
உண்மையான நண்பன் என்கிறார் ஒரு மேதை
ஆனால்
உன்னையே நண்பனாகக் கொள்ள
என்ன பேறு செய்தேனோ.
புதுமைகளை என்னுள் துளைத்தவனே
பூவுலக விந்தைகளை
உன்னுள் கண்டு வியந்தேனே.
உன்னில் வரையப்பட்ட வரிகளோ
வானில் மிளிரும் விண்மீன்களாய்
என் வாழ்வில் மிளிர்கின்றன சிந்தைகளாய்.
வாசிப்பு வளம்தரும் என்பது வென்றவர் கூற்றாம்
வாழ்வை மாற்றும் வல்லாயுதம் என்பதே
வாசிப்பாளராகிய உன் தோழர்
தமிழ் மழலையின் வாக்கு




கவிஞர் பெ.தனலட்சுமி,ஈரோடு

# யாருமற்ற பொழுதில்

வாடகை வீட்டுச்சுவரில்
ரவிவர்மாவின் சீடர் ஓவியங்கள்
மழைகாலத்திலும் கோடைவெயிலும்
இடியின் உடன்பிறப்புகளாய்
சத்தமிடும் குழந்தைகள்
அமைதி விரும்பியே
நிரூபிக்கிறேன்
இடிக்கே அப்பாவென்று.

தரையிறங்க விரும்பும் நட்சத்திரங்களின் முன்
குதித்து விளையாடும் குழந்தைகள்

சோற்றுப்பருக்களைச் சிந்தி
இந்தியாவின் நுழைவுவாயில் புறாக்களை
பசியாற அழைக்கும்
எங்கள் வீட்டுச் தேன்சிட்டுகள்



சொந்த ஊருக்கு
மனைவி குழந்தைகள் செல்லும்
அந்த நாள் பொழுதில்
என் மனதைப் போல்
எங்கள் வீட்டிக்குள்
குகையின் அமைதி

அடுத்த நாள் ஆரம்பித்ததும்
வீட்டின் மூலையில் கிடக்கும்
ஒற்றைச் செருப்பால்
பூகம்பத்தின் அதிர்வுகளாய்
எனக்குள் மகளின் நினைவலைகள்

கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# புலம்பல்

பேராசை கொண்டு
இயற்கையின் புலம்பல்
காதில் விழாதவனாய்
வேரோடு இயற்கையை
அழித்தவனின் ஓலம்
இன்று உலகெங்கும்
ஒலிக்கிறது!
இறைவனின் காதுகளை
அவை எட்டவில்லை!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# புது நிலவு

புதிதாக உதயமான நிலவை
பழுதாகமல் பாதுகாக்க
பார்த்து பார்த்து ரசித்தேன்
நிலவிற்கு தெரியாமல்
உரையாடிய நிலவை ரசித்தேன்
கருப்புநிலவு மூக்கின் கீழ் மச்சம்
திக்கு முக்காட வைக்கிறது
திகைத்தேன் திகிலடைந்தேன்
மனதினை மன்றாடிக் கேட்கிறேன்
மயக்கமது மதிக்கு செலுத்தாதே என்று
தட்டிக் கழிக்கிறது தறுதலை மனம்.



கவிஞர் இர மணிகண்டன்,வங்கனூர்

# அக்னி சிறகை விரி

தடைகள் போட்டிட ஆளா இல்லை
பெண்ணென ஏளனம் செய்திட வாயாயில்லை
கல்வி அறிவை கற்கும் போதே
குடும்ப அறிவை புகுத்திடும் உறவாயில்லை
கேட்டால் பாதுகாப்பற்ற சூழல் என்றே
குற்றம் சொல்லிடா உயிரா இல்லை
அனைத்தும் செவியில் கேட்டு அடுப்பங்கரையுள்
அடைந்து கிடந்தது போதும் பெண்ணே!
விரித்து வா உன் அக்னிசிறகை
வானம் கூட எல்லை இல்லை
அதனையும் தாண்டி சாதனை படைத்தே
பேசிய வாய்களை அடக்கிட செய்வோம்
உன் திறமைக்கான வலிமையை உணர்த்திடவே
நீ துணிந்து வா விடாமுயற்சியுடனே
பின்னர் வெற்றி உன் அருகிலே
இகழ்ந்த வாய்கள் புகழ்ந்திட தொடருமே
விடாது தொடர்ந்து விரித்து பறந்திடு
அக்னி சிறகால் உலகினை ஆண்டிடு



கவிஞர் இயற்கையின் காரிகை,கோவை

# காவியமான கண்ணதாசன்

சிறுகூடல் பட்டியில் பிறந்து சிந்தனையின்
ஊற்றாக புறப்பட்ட கவிஞர் கண்ணதாசன்
கண்ணதாசன் பாரதிக்கு பின்னர் அவரே
தமிழில் அதிகமாக இரசிக்கப்பட்ட கவிஞர்
தேனை ஊற்றுவது போல இவரது
கவிதை சத்தமில்லா ஓசையாக திகழ்கிறதே
கண்ணதாசன் கவிதை பொன் தேரில்
பயணம் செய்கிறதே காலம் கடந்தாலும்
சரிகைக்குள் செந்நூல்
போல தமிழுக்குள்
ஓர் இசையாய் ஓடுகிறதே கவி வரியில்
சொற்களின் கடலோசைப் போல தமிழ்
என்ற பேரமைப்பின் நாதம் இருந்ததே
தடம் பதித்து செல்வோரின் வரலாற்றில்
சாதனைப் படைத்து நிற்பவர் கண்ணதாசன்
கண்ணதாசன் வாழ்கின்றார் என்றாலே
அவரின் அர்த்தமுள்ள இந்து மதமே காரணம்
மக்கள் மனங்களில் உதடுகளில் அன்றும்
என்றும் நீங்கா நினைவுகளோடு
அசைப் போடுகிறது இவரதுப் பாடல்கள்
காலத்தை வென்று காவியமாக
வெற்றி திருமகனாக நிற்கிறார்
கவிஞர் கண்ணதாசன்



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# மக்கள் தேவை;சேவை நன்றே!

மாண்மதுரை மேலமாசி வீதியினர் சீர்கோபால்
பால்விற்பனை மேம்பட்டார்! கோபாலன் நற்தாத்தா
ராமச்சந் தரும்தான் அவ்வாறே! தேவைகள்
சார்ந்துள்ள புதுத்தொழிலின் சேவையோ நற்றுணையாம்!
தையல்பொறி பெடல்மெஷினே தொன்மைத்து! எளிமைத்து!
அடிப்படையே! அஃதறிந்த பின்னர்தான், "ஹைடெக்பவர்"
பொறிகளெலாம் பின்னவைதான்! மின்னாற்றல் சேருவதால்
ஆபத்தும் கூடியதே! மின்னோட்டம் உடல்தாக்கும்!
இன்றளவில் ஆயத்த ஆடைகளோ பற்பலவாம்!
இவற்றில் முன்னேற்றம் ஒவ்வொன்று வரும்போதும்
அதற்கேற்ப நவபொறிகள் வேண்டுவதே! ஆனாலும்
கிட்டிடுமே! குறைவான விலைதனிலே விற்றாலும்
தரத்தினிலே தாழ்விலாத தன்மைத்தே! கவனமாக
செயல்படுதல் வேண்டுவதாம்! சிறுதொழில்தான் ஈதாகும்!
பவர்மிஷின்கள் மாற்றங்கள் முன்னேற்றம் தொடர்ந்திடுமே!
முடிவுறாதே! பெரியளவில் தயாரித்தல் என்றுமிலை!
இற்றைநாள் கோபாலன் மூன்றாவது தலைமுறையே!
குலத்தொழிலே ஆனதனால் கல்லாமல் வெற்றியதே!
கண்கண்டதை கையாற்றும் செம்மைத்தாம்! விரும்பிச்செய்
ஆர்வத்தால் பணியாற்றல் மிக்கெளிதே! சுலபத்தில்
வெற்றியது நண்ணிடுமே! வெற்றித்தொடர் சங்கிலியால்
ஈடுபாடு மிக்கிடுமே! ஆர்வத்தர் யாவர்க்கும்
எத்தொழிலும் வெற்றிதனை சேர்த்திடுமே! காலத்திற்
கேற்றதுவாய் தேவைக்குத் தக்கதெனில் ஆக்கங்கள்
நன்றிக்கு உரியதுவாய் ஆனதெனில் நம்பெயரை
நீள்நினைப்பில் கொள்வாரே! பிற்பலவாய்க் காண்பதினும்
சிற்சிலவே கண்டாலும் தேவைக்கு ஆகுமெனில்
நீடிருப்போம்! மக்கள்தன் தேவைக்காம் சேவையே
நன்றாகும்! நாமாற்றி நாநிலத்து ஓங்குவமே!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# சிந்தனை செயலாற்றும்

சிந்திப்பது மனிதன் மட்டுமே!
விலங்குகளுக்கு பட்டறிவு!
மனிதனுக்கு பகுத்தறிவு!
சிந்தனையே பகுத்தறிவின் ஊற்று!

சிந்தித்தால் தர்க்கம் உண்டாகும்!
தர்க்கம் தவறுகளை ஆராயும்!
ஆராய்ச்சி காரியங்களை செம்மையாக்கும்!
செம்மை சிகரங்களுக்கு இட்டு செல்லும்!

நில்! செவிமடு! யோசி! செயலாற்று!
அம்பை விடுமுன் கவனம் குவி!
ஆறறிவுக்கு முன் விளைவை யோசி!
ஆக்கமெனில் அவ்வறிவை நேசி!



சிந்தனை செயலாற்றும்!
செயலால் கனவு மெய்ப்படும்!
இயக்கம் இடறினால் தோல்வி!
இலக்கை தாக்கினால் வெற்றி!

சிந்தனை பகுத்தறியும்!
பகுத்தறிந்தால் வேற்றுமை தெரியும்!
வேற்றுமை புரிந்தால் விளைவுகள் புரியும்!
விளைவுகள் புரிந்தால் கலங்கியது தெளியும்!

சிந்தனையை சீர் தூக்கி!
நன்மை தீமை ஆராய்ந்து
மேலெது கீழெது
உள்ளெது புறமெது புரிந்து
களம் காண்! வசப்படும் வான்!

சிந்தனை புலன்களை கூராக்கும்!
கூரானால் பார்வை நேராகும்!
நேரானால் பாதை புலப்படும்!
பாதை உனதானால் பயணம் வசமாகும்!

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு,திருச்சி

# மரணப்பாதை

துளிர்விட்டு துள்ளியெழும்
தும்பையே!
நீ மலரும் முன் - உன்
வாழ்வின் பாதை
வசந்தத்தை எரித்து விடுமோ

கலியுக கள்வர்களிடமிருந்து
காக்கவே அன்றே
அருந்தினாயோ கள்ளிப் பாலையும்

இதழ்கள் விரியா
மொட்டுகளையும் எரித்து
உண்ணும் கொடூர வண்டுகள்
வலம் வரும் வனத்தில்
நீ வளர்வது எவ்வாறு ?

உன் அழகிய வதனத்தில்
அமிலம் ஊற்ற அவதரித்த
அறிவற்றவர்கள் வாழும்
அகிலமிது அனிச்சமே

வம்சமென்னும் வண்ணம்
பரப்ப வந்த உன்
வண்ணம் அழித்து உன்னையே
வசைப் பாடும் வாழ்விது

புவி பூவனத்தில்
பூக்கவிருக்கும்
பெண் பூவே - எவ்வாறு
ஏற்பாயோ இந்த
மரணப்பாதையை?



கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ,விருதுநகர்

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முதலும் தமிழே!!

# என்னவள் எதுவுமாய் இருப்பவள்!

அவள் பொறுமை ஆழியை
தோற்க செய்திடும்!
அவள் பேசும் மொழி இலக்கண
மரபை மீற செய்திடும்!
அவள் நுதல் சூட்டி வான் மீனை
நாண செய்திடும்!
கார்கூந்தலில் பூச்சூடி
தேவதையை வெல்வாள்!
அவள் விரல் பட்ட நுரை
வானவில்லை வீழ்த்தும்!
செய்யுளை அழகாக்கும்
யாப்பு!
எம்மை நேர்செய்யும்
காரிகை!
என்னுள் கலந்தவள்!
எதுவுமாய் இருப்பவள்!



கவிஞர் செ.தமிழ்நேயன்

# வார்த்தை

காலையில் கண் விழித்ததும்
பேசும் முதல் வார்த்தை உன்னுடனே!

உறங்கும் முன்னான பேசிய
வார்த்தையும் உன்னுடனே!

மூடிய விழிகள் திறவாவிட்டால்
நான் பேசிய கடைசி பேச்சு
உனக்கானது ஆகவும்,
உன்னுடையதாகவும்
மட்டுமே இருக்க ஆசை!





கவிஞர் ஜோதி,பெரியகுமாரபாளையம்

# நௌவி போல துள்ளித் திரிந்தடுவேனே

எனக்கான எந்த நொடியிலுமே!
கண்ணுக்கினிய இயற்கை கொடை,
காதுக்கினிய காற்றோசை,
கிருபாகரனின் அருள்பார்வை,
கீற்றிடும் மின்னல் ஒளி,
குரல்கொடுக்கும் பறவைகள்,
கூட்டமாக வாழும் விலங்குகள்,
கெடுதல் நினைக்கா பூமித்தாய்,
கேட்டதை கொடுக்கும் மரஞ்செடிகள்,
கைக்கெட்டா சூரியனும்,நிலவும்,
கொள்ளை அழகு கடல்,
கோபுரமுள்ள கோயில்கள்,
கௌடிலமுள்ள வண்ணமிகு வானவில்.

நல்லதை அனைத்துமே விரும்பிடுவேன்,
நாளும் அதையே காதலிப்பேன்,
நின்மனது அறிந்த ரகசியம்,
நீள் வாழ்க்கையில் வேண்டிடுமே,
நுழைந்து வாழ பிரச்னையும்,
நூற்று கோடிக்கணக்கான மக்களையும்,
நைமித்திகம் உள்ள வாழ்வாகுமே,
நொடி நேரமும் விரும்புகிறேன்,
நோயில்லா வாழ்வுக்காக,
நௌவி போல துள்ளித் திரிந்தடுவேனே!



கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# நீ நான் நாம்

## அன்பு மகளே!

எந்தன் தொப்புள் கொடி உறவானாய்!
என் மனம் நிறைந்த பூரணமானாய்!

அம்மா என்றே அழைக்கலானாய்!
ஆசையுடன் செல்லம் கொஞ்சும் காதலானாய்!

விழிகளில் வழிந்திட்ட நீரைத் துடைக்கும் கரங்களானாய்!
நெஞ்சினில் சுரந்த அன்பானாய்!

எனதருமை மகளானாய்!
ஏற்றம் கொடுத்திடும் சேயானாய்!

தூக்கத்தில் வருகின்ற சொப்பனமானாய்!
துக்கம் கொடுத்திடா துணிச்சலானாய்!



நெடுநாள் சேர்த்து வைத்த புதையலானாய்!
நேற்று கடந்த இன்றானாய்!

இலையுதிர் இல்லா வசந்தமானாய்!
தென்றலினூடே சுகந்தமானாய்!

எண்ணமதில் நன்மை செய்திடுவாய்!
ஏகாந்தமாய் வாழ்ந்திடவே ஆவல் கொண்டிடுவாய்!

நீ என்றுமே நான் ஆனாய்!
நான் நீ இருவரும் இணைந்தே ஆனோமே நாமாய்!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# உறவுகள்

மாறாத அன்பும் மீறாத பண்பும்
மாளாமல் என்றும் மீளுமே நாளும்

உறவுகள் வரவதால் உதிரமும் உவக்குமே
உண்மையாய் இருக்கையில் உள்ளமும் நயக்குமே

பாசத்தை வேசமாய் நாசம் செய்திடும்
பாதகம் படுகுழி துவேசம் நெய்திடும்

துரோகமாய் செய்வினை உறவிலே களையானால்
விரோதமே நாளுமே தரமது களையுமே

பசுமையும் நீங்குமே சருகாகிக் கருகுமே
பசுத்தோல் போர்த்திய புலியாகி உறுமுமே

உணர்விலே மெய்யான உறவுகள் அன்பிலே
புணர்ந்திடும் இன்பமே வரவாக என்றுமே




கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான் குடி

# எ(வ)ண்ணம் போல் வாழ்வு

வெகுளியை வெளிபடுத்தும் வெண்மையே!
ஆசையை தூண்டும் சிவப்பே!
மனதை குளிர்விக்கும் பச்சையே!
அமைதியை தரும் இளஞ்சிவப்பே!
ஆற்றல் மிகு மஞ்சளே!
அறிவான ஊதாவே!
உறுதியை தரும் கருமையே!
இத்தனை நிறங்களில்
மனித மனங்கள் இருக்க
கேட்பது என்னவோ கருப்பா? சிவப்பா?
எதுவாகினும்
எ(வ)ண்ணம் போல் வாழ்வு!
என்பதை மறவோம்!



கவிஞர் யாழினிமாறன்,தஞ்சை

# ஹைக்கூ

கோவில் திருவிழா
பந்தலுக்கு ஊன்றிய காலில்
சுற்றி வளர்கிறது கொடி

இடி மின்னலுடன் மழை
சட்டென்று அமைதியானது
திடீர் மின்தடை

பந்தலைத் தாண்டி
விழுகின்ற மழைத்துளிக்குப்
பெரிதாகத் தடம்

கூரை வீட்டில்
ஒழுகும் மழைநீர்
நிறைகிறது குடம்



கவிஞர் பாண்டிய ராஜ்

# என்னை பிரிந்த அப்பா!

கடந்து வந்த கஷ்டங்களில்
இடிந்து போன இதயத்தாலும்
என் வாழ்விற்கு பிரார்த்தித்தாயே
நானிலத்தில் நான் வாழ
உன் பிரார்த்தனையின் காரணத்தால்
இவ்வையக உருண்டையில்
மணம் மலர்ந்து நான் வந்தது
நீ உதிர்ந்து சென்ற பின்னா
புதுக்காட்சி புலன் சேர்ந்தது
நீ பிரிந்து சென்ற பின்னா
தாள் திறந்தென் வான் சிரித்தது
நூலருந்து நீ தொலைந்த பின்னா
பிரிவு என்ற மூன்றெழுத்து
ஒய்யாரமாய் உயர்ந்து நிற்க
தேர்வு என்ற மூன்றெழுத்தை
எங்கு சென்று நான் தேட.



கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம்

# வலியறிதல்

அதிகாரம் : 48




தன்னிலும் பகைவனிலும்
செயலிலும் ஆராய்ந்து.
வலியெனும் பலமறிந்தபின்
நுழைந்திடல் சிறப்பு.

பொருந்தத்தக்க செயலின்
பெருவலி ஆய்ந்தறிந்து.
முயன்று நிலைநின்றோர்
வருந்தத்தக்க தேதுமில்லை.

தன்வலி அளவறியாது
மனமெழுந்து செயல்தொடங்கி.
இடைவெளியில் கால்தடுக்கி
வீழ்ந்தழிந்தோர் பலருளர்.

பிறனுடன் பொருந்தாமலும்
தன்வலி அறுதியிடாமலும்.
வலியோனாய் தனைநினைந்து
வியந்திடுவோர் கெட்டழிவர்.

மயிலிறகு மெலிதாயினும்
வலிகொண்டு செம்மாடாய்.
பொலிபொலிந்து வண்டியேற்ற
அச்சொடிந்து சரிந்துவீழும்.

தருவின் நுனியேறியும்
தாளாமல் மேலுமேற.
முனைந்திடும் மூடரின்
உயிருக்கே உலையாகுமது.

தன்பொருள் அளவறிந்து
தானம் தந்துதவலே.
தன்தேவைக்கு குறையிலாது
தான்வாழும் நெறியாகும்.

தனம்வரும்வழி சிறிதாயினும்
பணம்போகும்வழி விரிதாகிடின்.
அவனுக்குக் கேடாகிடும்
வழிகுறுகிடின் கேடுநீங்கும்.

தனவளமறிந்து வாழாதானுக்கு
பலவளமிருந்தும் கானலாகி.
கண்காணாது மறைந்தழியும்
பணமிருந்தும் இல்லாதாகும்.

தன்தனத்தின் அளவறியாது
தான்தோன்றியாய் தானமீந்திடின்.
அவன்தனத்தின் அளவுகுறைந்து.
அடுக்கடுக்காய் கரைந்துபோம்!

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# இரண்டாம் நிழல்

என்னை விட்டு விலகியதற்காக
உனக்குள்ளே நீ
பெருமூச்சு விட்டுக் கொள்வாய்

எனக்காக
தொலைத்த நாட்களை நினைத்து
உன்னையே நொந்துக் கொள்வாய்

செலவழித்த புன்னகைகளுக்காக
இதழ்களை கடிந்துக் கொள்வாய்

எழுதிய கடிதங்களுக்காக
விரல்களோடு மோதிக் கொள்வாய்

அழகுப்படுத்தியதற்காக
உன் ஆடைகளோடு
கோபம் கொள்வாய்

பிரிந்து விட்டதற்காக
நீ மகிழும் போதும்
அன்பு பாராட்டியதற்காக
நீ வருந்தும் போதும் கவனி
உன் கூடவே இருப்பேன்



நினைத்தவுடன்
கழற்றி வைப்பதற்கு
ஆடையல்ல காதல்

கல்வெட்டு போல
இரு மனங்கள் செதுக்கும்
மகா உன்னதம்

உன்னையே நீ
ஏமாற்றிக் கொள்
அது உன் சுதந்திரம்

மரணத்தின் நாழிகை வரை
உன் ஞாபகம்
எனது இரண்டாம் நிழல்.

கவிஞர் ஐ.தர்மசிங்,நாகர்கோவில்

# வார்த்தையின் வலி(மை)

வார்த்தைகளுக்கும் உயிரிருக்கு தெரியுமா உங்களுக்கு?
சாகக் கிடப்பவனை பிழைக்க வைத்திடும்
எளியவனை மேலே உயர்த்தி வைத்திடும்
விழுந்துகிடப்பவனை எழுப்பி நடக்க வைத்திடும்

வார்த்தையை போல கூர்மையான ஆயுதமேது?
பலசாலியையும் பட்டமரமாய் சாய்த்திடும் வார்த்தை
வலிமை கொண்டவனையும் வீழ்த்திடும் வார்த்தை
வாள்வீச்சு குறிதவறலாம் வார்த்தை வீச்சு கொன்றிடும்

இருபுறமும் கருக்கான பட்டயமே வார்த்தை
தவறாக பயன்படுத்தினால் உடையவனையும் கொல்லும்
பிழையாக பயன்படுத்தினால் பிடித்தவனையும் கொல்லும்
உரிய வார்த்தை தக்க நேரத்தில் உயிரையும் காக்கும்


பாண்டியனின் வார்த்தை கோவலனை கொன்றது
கண்ணகியின் சத்தம் பாண்டியனை கொன்றது
கற்புக்கரசியின் சாபம் மதுரையை எரித்தது
பாஞ்சாலியின் சிரிப்பால் பாரதப்போர் மூண்டது

வார்த்தையின் அர்த்தங்கள் அனர்த்தமாகியதுமுண்டு
வார்த்தையின் வடிவங்கள் அன்பை சொறிந்ததுமுண்டு
கொண்டுவா என்ற கட்டளை கொன்றும் வந்திருக்கு
எடுக்கவோ கோர்க்கவோ என்றது நட்பிற்கே இலக்கணமாயிருக்கு

வார்த்தையின் ஜாலங்களில் வழுக்கியும் விழலாம்
வார்த்தையின் வலிமையால் வீரசிவாஜியும் ஆகலாம்
நம்மிடமிருக்கும் வரை நமக்கு கீழ்ப்பட்டது வார்த்தை
நாவை தாண்டிவிட்டாலோ? நம்மை அடக்கிடுமே

பிறர் காயம் ஆற்றும் மருந்தும் வார்த்தைதான்
பிறரை காயப்படுத்தி அழிப்பதும் வார்த்தைதான்
வார்த்தையின் வலிமை உணர்ந்து செயல்படுவோம்
வார்த்தையால் வலியை தந்து பிறரை வதைக்காதிருப்போம்

வார்த்தைகளில் கவனம் வைத்து வாழ்வோம்
வலிமையற்றவரையும் நம் வார்த்தைகள் பலப்படுத்தட்டும்



கவிஞர் பி.ரோஜாராணி,தேனி

# சுயம்

முள் எறிந்தாலும்
சட்டைப் பொத்தானாக்கும் வித்தை
எப்படி யென சிந்தித்தே கடக்கிறேன்

சுயமாகிப் போவதே
சித்தனுக்கு பெருமை

சுயம் துறந்து
பெரும் மினுக்கல்
செத்தைக்கு நேர்

சுயமற்ற அகங் கண்டு
சிலை வைக்கப் போவதில்லை

எப் பொருள்
எவர் வாய்கூற்றும் பெரிதல்ல
திமிரென உரைத்தாலும்
தன்னில் தானே சுயமாகி
நிற்கும் உன் நிழல்



ஒவ்வொரு நாளும்
மலைப்பாகி
கண்ணாடி முன்
வியப்பாகி போகிறாய்

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# தமயனுக்கு தங்கையின் வரிகள்

சண்டையிட நூறு காரணங்கள்
அன்பை பொழிய ஆயிரம் காரணங்கள்
வாய் கொழுப்பு சற்று அதிகம் தான்
விட்டுக்கொடுக்காமல் வாதாடும் வலியவனின் வலிமை
அதைவிட அதிகமே.
தூற்றினாலும் தோற்றுப்போக விடாமல்
கைநீட்டினாலும் கைத்தட்டி ஏளனம் செய்யாமல்.
ஏக்கம் கொள்ளவிடாமல் பாராட்டி.
இன்பம் பயக்கும் இவன்.
என்றும் என் பொக்கிஷமே.
அவனே என் தமையன்.



கவிஞர் ரதிப்பிரியா ராஜசேகர்,இடைப்பாடி

# என்னவென்று சொல்வதம்மா

காதோரம் குளிர்
மூட்டும் மொழிதனில்
வாவெனும் அழைப்பும்

பூவொன்று மலர்ந்து
மணம் மனதோடு
சிறைபடும்

மறைவில் விழிகள்
மௌனத்தை சூடும்
கதவோர தீரைச்சீலை
காற்றை கண்டுவரச் சொல்லும்



என்னவென்று சொல்லும்
கேட்கும் மொழிக்கூற்றா
பொங்கிடும் ஒசைகள்
உணர்ந்ததோ
பரபரத்து சன்னலை ஊடுருவும்
மரத்திலே அமர்ந்து

ஒசையின்றி கவிதைக்குள்
ஒளிந்தாடும் மனதின்
உயிரோசையில் அசைந்தாடும்

நிலவு பாய்விரிக்க
நித்திரை பறித்த இருளின்
சிரிப்பில்

மயங்கும் நெஞ்சங்கள்
சொல்லாதே சொல்லி
செல்லாதே
சொக்கிடும் மௌனங்களின்
ஆனந்த ஸவ்ரங்களின்
ஆலாபனையில்


இதழோர பூஞ்சிரிப்பும்
ரகசியம் மொழியும்
என்னவென்பது
ஏதேன்பது
ஏகாந்தமங்கே இன்பத்தில்
இருளின் இன்னிசையும்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# விழிக்கேணி

உயிரோசையில் உலவும்
அவளைக் கேட்டுப்பார்
மூக்கும் மூக்கும்
உரசும் முத்தசுவை

அந்தி வழிய
ஆதவன் விடைபெற்று
தென்றலை அனுப்பி
தேகம் சூடேற்றி
அவள் மூச்சில்
என் சுவாசம் நிறைத்தேன்



என் கருவிழி
முழுவதும் நீ
உன் கருவிழி
முழுவதும் நான்
நிரம்பிய விழிக்கேணி
ததும்பும் நாம்

விரல் தொட்டு பேச
உயிர் தொட்டு கூச
நமக்குள் அழகிய உலகம்
ரசித்து வாழ்ந்தோம்
சில மணி நேரம்

அவளுடன் நான்

கவிஞர் ஆர்.மோகன் ராஜ்,சென்னை

# பிசுபிசுத்த மழைமேகங்கள்

வானை சூழும் மேகங்கள்
கூட்டை தேடும் காகங்கள்
இதற்கிடையில் கரைந்து போகிறது மனம்.

வேகமெடுக்கும் எறும்புகள் கூட்டம்
தூரத்தில் மரங்களை நனைத்து
ஈரக்காற்றில் மண்வாசம் பரப்பி வருகிறது
பிசுபிசுத்த மழைமேகங்கள்!

ஜன்னல் கதவை திறந்து வைத்துவிட்டு
வாசல் தாண்டி வந்து நிற்கிறேன்
ஒற்றை மழைத்துளியில் கரைந்த பின்னே
கடந்துபோகிறது எனது ஊரை தாண்டி.

மீண்டும் மீண்டும் இதுபோல தொடரட்டும்
வசந்த காலத்தை வரவேற்றியே
விரித்த கைகளோடு கரைந்து போகிறேன்
கரைந்தே போகிறேன்!



கவிஞர் ச.இராஜ்குமார்,திருப்பத்தூர் மாவட்டம்

# யோகா

யோகா என்பது வடமொழிச் சொல்.
ஆதியோகியிடமிருந்து அறியப்பட்ட
யோக சாஸ்திரத்தை நமக்கு அளித்தவர்
பதஞ்சலி முனிவரே ஆவார்.
இம்முனிவரின் யோக சூத்திரங்கள்
இந்திய வேத தத்துவ தரிசனங்களில்
ஒன்றாக அமைந்துள்ளது.
யோக சூத்திரம் என்னும் நூலே!
இக்கலைக்கு அடிப்படையாக விளங்குகிறது.
மற்ற கலைகள் கண்ணையும், கருத்தையும் கவரும்.
பாடல், ஆடல் என பல்சுவை
நிகழ்ச்சிகள் பல உள்ளனவாம்.
அக்கால மக்களின் வாழ்க்கையில்
உழைப்பு, உழைப்பு.
இதைத்தவிர வேறு எதுவும் அறியப்படவில்லை.
உடற்பயிற்சிக்கு அவசியம் இல்லாததால்
ஆரோக்கியமாகவும் ,நீண்ட வாழ்நாள் வாழ்ந்தார்கள்.
அறுபத்து நான்கு ஆயக்கலைகள்
என்றால் , யோகாவிற்கு மட்டுமே
சிறப்புகள் ஏராளம்.
யோகா உலகளாவிய அளவில்
நம் இந்திய நாட்டிற்கு
அங்கீகாரம் கிடைத்துள்ளது.
யோகா என்றாலே இணைதல் என்றாகுமே!
உடலையும், மனதையும் ஒருங்கே இணைத்தும்
ஆரோக்கியமும், நிம்மதியையும் தருவதே யோகா!
யோகம் உள்ளவர்களுக்கே, யோகா அமையுமே!
காலை, மாலையும் செய்யும் இக்கலை
அற்புத கலையிலும் அற்புதமானதே!



கவிஞர் கிருஷ்ணவேணி. ஆ,ஊத்தங்கரை

# அன்றொரு நாள்

ஒரு மாதம்
முன்பாகவே
வீடுகள்
பலகாரக் கடை
ஆயின

தையல் கடைகளுக்கும்
வீடுகளுக்குமாய்
செருப்புகள்
தேய்ந்தன

சிவப்பு
தபால் பெட்டி
வாழ்த்து
அட்டைகளால்
மூச்சு முட்டின

புத்தாடைகளின்
வாசனைகளுக்காய்
அவ்வப்போது
அலமாரிகள்
திறக்கப்பட்டன

மருதாணியுடன்
எதை சேர்த்தால்
சிவக்கும்
ஆராய்ச்சியின் முடிவில்
கட்டெறும்புகள்
தப்பி ஓடின

காய்ச்சிய
நல்லெண்ணையில்
மூழ்காத குறையாய்
அப்பா
முக்கி எடுக்க

நான்கு மணி
சீயக்காய் குளியல்
கண்களை உறுத்தும்
கபாலம் திறக்கும்

புனைந்த புத்தாடை
காண்பிக்க தனி
ஆடை அலங்கார
அணிவகுப்பு
நடக்கும்

அம்மாவின்
கறி குழம்பு
அடுப்பில் கொதிக்க
நாசிகள் நனையும்

வீதிகள்
செவிடாக
பட்டாசுகள்
அலறும்

தாத்தா பாட்டி
தலைமையில்
தொலைக்காட்சி
பட்டிமன்றங்கள்
ஓய்வில்லாமல்
மலரும்



முன் விழித்த
இரவின் மகிழ்ச்சியில்
பின் தூங்கும்
தீபாவளிகள்

இன்று
முழுவதுமாய்
ஆழ்ந்த
நித்திரையில்.

கவிஞர் அன்ன லெட்சுமி சரவணன்,ஈரோடு

# தனித்தீவு

வாழ்க்கை என்னும்
அழகிய தனித்தீவில்

ஆசைகொண்டவை
எல்லாம் நம்மைவிட்டு
அகன்று விட

அதீத பாசம் வைத்தவர்கள்
எல்லாம் நம்மை விட்டு
விலகி செல்ல

எதுவும் நிரந்தரம்
இல்லை என்று
நாம் உணர்ந்து

தனிமையே துணை
என்று நாம் வாழ்கையில்

நாம் அதிகம் எதிர்பார்த்த
நேசித்த உறவொன்று

எதிர்பார்க்காத நேரத்தில்
நம்மை தேடி வருகையில்

நேசம் கொண்ட உள்ளம்
நம்மை அறியாமல்

முழுதாக ஏற்கா விட்டாலும்
கடந்த காலத்தின்
நினைவுகள் மறந்து

நிகழ்காலத்தின்
நிதர்சனம் மறந்து

அந்த ஒருநொடியில் அதீத
சந்தோசம் கொள்வது
ஏனோ.



கவிஞர் ரதி ஜெயராஜ்,வல்லம்

அகர முதல

# தேநீர்

இருள் சூழ்ந்த வேளையில்
புலராத அதிகாலையில்
தினம் தினம் நீயும்
என்னை முத்தமிட்டு செல்கிறாய்.

பறவைகளின் சலசலப்பு
ஜன்னலின் காற்று சிலுசிலுப்பு
உதடுகள் ஏனோ படபடப்பு
நாவில் சுவைத்தால் வெதுவெதுப்பு
உள்ளத்தில் ஒரு துடிதுடிப்பு
உண்மையில் இதுவே சுறுசுறுப்பு.

உந்தன் வாசத்தில் நானே உனக்கு
அழையா விருந்தாளி
நிதமும் ரசித்து ருசித்து பருகிடவே
புது உற்சாகம் பிறக்குது மூச்சினிலே
உறவாக வந்தாய் உயிருள்ள வரை
தொடர்கிறாய் வாழ்க்கையிலே.

ஒரு குவளை தேநீரில்
உள்ளம் நிறைகிறது
பொழுதும் புதிதாய் விடிகிறது
புது விடியலும் தெரிகிறது
முகமும் அதனால் மலர்கிறது.



கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# உயிரே

உன்னை நினைத்து
உள்ளத்தில் செதுக்கி
உருவம் கொடுத்து
உலகையும் மறந்தேன்

உடையாத காதலை
உயிராக்கி வளர்த்தே
உன்னால் எனக்குள்
உரமான வேரானதே

உச்சிமுதல் பாதம்வரை
உணர்வுகள் நீயாக
உறக்கம் தொலைத்து
உளறல் கொண்டேன்



உள்ளூறும் கற்கண்டாய்
உன்னால் இனிக்கிறது
உதிரத்தின் ஓடலில்
உன்னோசை கேட்கிறது

உருகிய மெழுகாய்
உதிர்ந்து போகின்றேன்
உண்டாகும் மையலும்
உலவுது மேகமாய்

உரசும் தென்றலும்
உன்மூச்சாய் எனக்குள்
உறவோடு மகிழும்
உன்பெயர் சொல்லும்

உண்டான மையல்
உச்சம் தொட்டதே
உள்ளுக்குள் தீண்டல்
உசுப்பும் உயிரானதே

கவிஞர் தமிழ் நதி கிருஷ் அபி,இலங்கை

# இசையில்லா வாழ்வு

என்னிடம் கேட்டால் அருவியின் சலசலப்பும்
அணிலினங்களின் பாஷையும் அரியதோர் இசையென்பேன்
கடலின் அலையும் அலையின் நுரைகள்
வெடிக்கும் ஓசையும் கூட அமுத கானமென்பேன்
காற்றின் ஓசையும் காதருகே கணவனின் மூச்சும்
நான் இரசிக்கும்  காதல் கீதம் தானென்பேன்

மழைக்கால மண்வெடிப்பும்
புற்றீசல் கிளர்ந்தெழும் ஓசையும்
கோடைகாலத்தில் மின்னலும்
மேகங்களின் மோதலும் இசை தானென்பேன்
புள்ளினங்களின் ஓசையும் மழையின் ஓசையும் கூட
இரசிக்கத் தெரிந்தவனுக்கு நாதமென்பேன்
குயிலினதும் போத்தினதும் கூடும் நேரக் கூவல்களும்
காதல் தொடர்பாடல்களும் ஏழிசை நாதமென்பேன்

பூவினத்தில் மொட்டலரும் ஓசையும்
வித்துக்கள் வெடித்துப் பரவும் சப்தமும் கூட
அழகிய இசையென்பேன்
அமுதம் பருகும் தேனீக்களின் ரீங்காரமும்
இரசிப்பதற்கோர்  இன்னிசையென்பேன்
ஆவினத்தின் தேடலும் கன்றுகளின் குதூகலமும்
தாய்மடியில் தாலாட்டும் சேய்வதனப் புன்னகையும்
கேட்டிட அழகிய நாதமென்பேன்



இயற்கையின் பசுமைகளிலெல்லாம்
வல்லினம் மெல்லினம் கலந்த
சப்தஸ்வரங்களாய் அத்தனையும்
அழகிய இசையென்பேன்
பாங்கின் ஓசையும் கோயில் மணியின் நாதமும்
காதொலிரும் அரிய இறையிசை என்பேன்
இத்தனை அழகைப் படைத்த இறைவன்
அண்ட சராசரங்களினதும் இசை ஞானியென்பேன்.

ஆதலால்
இசை இல்லா வாழ்க்கை இங்கு சூனியமென்பேன்

கவிஞர் ஷெண்பகச்சோலையாள்,ஆய்ஷ்,இலங்கை

# நாம் நமக்கே எதிரி

நம் ஒவ்வொருவர் பிறப்பிலும் ஒவ்வொரு விஞ்ஞானம்
அன்று முதல் இன்று வரை தீரா நோயா?
ஆம், கனவிலும் நினைவிலும் மறுக்கும் நொடியிலும்
அவர் ஆணும் ஒவ்வொரு பெண்ணும்
யாரோ ஒருவரால் அவருக்குள் அவராகவே
எதிரியாக வாழ்க்கையில்.

காதலாலோ அல்லது காலத்தினாலோ
பதுமை மாறாமல் பழரச சுவையில்
பாகுபட்டு கிடக்குது இந்த மனித மனம் - அது தினம்.
பெண்ணால் அழிந்த ஆண்களின் வாழ்க்கை மந்திரம் இல்லை.
அது நிரந்தரம் பின்னாளில் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும்
ஓர் கவி இழந்த கவிஞனாக.



காவியம் படைப்பதற்கு அல்ல
தன் கவியை பலர் படிப்பதற்காக.
இங்கு புண்பட்ட நெஞ்சம்
புகை பட்ட நெஞ்சம் ஏராளம் தாராளம் உலகில்.
இங்கு அழியாச் சுவடு உண்மையின் வெளிப்பாடு
யாராலும் ஆனால் பொய்யின் புகழ் பாடு தாராளம்
தரணியெங்கும் தலைவனை தூக்கிக் கொண்டாடும் அளவிற்கு.

நிதர்சனமும் அனுதினமும் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும்
மாறிக்கொண்டே இருக்கும் மாற்றத்தின் தோற்றத்தில்
அந்நொடி உண்மையான நிதர்சனமாக யாரோ ஒருவரால்.
இங்கு நாம் நமக்கே செய்யும் துரோகம் என்பது ஏராளம்
ஆனால் வாழ்க்கையில் புரிந்து கொண்டு காண்பது தாராளம்
பின்னாளில்.

சொல்லப்படாத கலைஞன் களஞ்சியத்தின் கூற்று போல்
ஒவ்வொருவர் வாழ்க்கையின் களஞ்சியமும்
வாழ்க்கை குருதியில் நின்று அவர்களின் பின்னாளில் பற்றி எரியுதே
குருதி அவர்களுக்கு அங்கீகாரம் இல்லாத இந்த அடிமை
அங்கீகார ஆக்கிரம அடக்குமுறை ஆணவம் நிறைந்த நாட்டில்.

ஆனால் தீட்டப்பட்ட தீண்டாமையும் வறுமைக் கூட்டு நிலைமையும்
வாட்டி விட்டது பலர் வாழ்க்கையில் வேடிக்கையாக.

நாம் நமக்கு எதிரியாக வாழ்நாள் முழுவதும்.

நன்றிகளுடன் நானும் காலத்தால்

கவிஞர் ம.செல்லமுத்து,நுத்தப்பூர்

# என் தேடல் நீ

என் தேடலின் தேவதை நீ!
என் பாடலின் பல்லவி நீ!

நான் வாசிக்கும் புத்தம் புதிய புத்தகம் நீ!
நான் நேசிக்கும் செந்தமிழ் நீ!

தொலைவில் இருந்தாலும் தொலைத்துவிடாத வைரம் நீ
மறைவாக இருந்தாலும் மறக்கமுடியாத மாணிக்கம் நீ!

நான் உன்னில் வாழ்கிறேனோ! இல்லையோ?
நீ என்னில் வாழ்கிறாய்!

உன் நினைவுகள் சுமந்துகொண்டு
சுகமாக வாழும் அன்பரசன் நான்!

எத்தனை உறவுகள் என் அருகில் இருந்தாலும்
நான் தேடும் தேவதை நீயே!

ஆயிரம் பேரை நான் பார்த்தாலும்
என் கண்ணில் நீங்காத தங்க நிலவு நீயே!




கவிஞர் அ.இராபர்ட்கென்னடி,கானூர்

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!

# தயவு செய்து என்னை காதலிக்காதே

சாதாரணமானவன்தான் நான்
ஆனால் என்னைப் போல
சாதாரணமானது அல்ல
கொடுரமானது.



கொஞ்சம் அன்பை கேட்கும்
கொடுத்து விட்ட உனக்கு திகட்ட திகட்ட
அன்பாய் அரவணைத்திடும்.

உன்னை புலம்ப வைத்திடும்
கண்ணீரால் ஈரமாக்கிட வைத்திடும்
கதறி அழுதிட வைத்திடும்.

கதறி அழுத உன்னை கட்டி அணைத்து
நெற்றி முத்தம் ஒன்றை ஈரத்தோடு கொடுத்திடும்.
கொட்டிக்கிடக்கும் விண்மீனைகளை போல
அள்ள அள்ள குறைந்திடாது.

உந்தன் சாதாரண நாட்களை எல்லாம்
பண்டிகை நாட்களாய் மாற்றிடும்.

நீ துயில் கொண்டிட தாலாட்டு பாடிடும்
நீயே!
இந்த பாலாய் போன காதல் என்று சாபம் கொடுத்திடுவாய்
மறுதினமே அதை நாய்க்குட்டியைப் போல கொஞ்சிடுவாய்
வெட்டவெளியினில் உன்னை சிரிக்க வைத்திடும்.

இருண்ட இரவினில் சத்தமே வராத அழுகையினை கொடுத்திடும்.
இவ்வளவும் செய்து விட்டு புது தெம்பினை கொடுத்திடும்.

இறுதியாய் நம்பிக்கை இருந்தால்
என்னோடு வந்துவிடு.
என்றழைத்திடும்.

கவிஞர் கு.ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி,மதுரை

# இனியவை கூறல்

**இன்சொல் உதிர்** **அதிகாரம். 10**

நாம் உதிர்க்கும் சொற்கள் அன்பு கலந்து
வஞ்சகமின்றி மெய் பொருள் கொண்டு வருமாயின்
அஃ்ஃதே இன்சொல் ஆகுமே

அகமும் முகமும் மலர்ந்து நாம் பேசும் இனிமையான சொற்கள்
ஈகையை விட சிறந்ததாகுமே
இதுவே அறவழியில் அமைந்த பண்பும் இதுவே

இனிமையான சொற்களைப் பேசி
கனிவுடன் பழகுவோருக்கு எந்த
துன்பமும் அண்டாதே




ஒருவரின் சிறந்த அணிகலனென்பது
அடக்கமும் பணிவும் இனிமையாக பேசும்
இயல்பான குணமுமே
இதைவிட சிறந்த அணிகலன் ஏது?

நல்வழியில் பிறருக்கு இனிய சொற்களை
உள்ளன்போடு சொன்னோம் எனில்
பாவங்கள் அவனிடம் அண்டாதே
அறமும் வளர்ந்து பெருகுமே.

இன்சொல் பேசுவோர் என்றென்றும் நன்மையையும்
இன்பத்தையும் பெறுவர்
வாழும் போதும் மறைந்த பின்னும்
இன்பமும் புகழும் தரும்

சிறுமையிலிருந்து நீங்கிய இனிய சொல் பேசுபவர்க்கு
இன்சொல் இவ்வளவு பயனைத்தர
வன்சொலை உதிர்க்கும் காரணம் யாதோ?

இது கனி இருப்பின் அதை விடுத்து
காய் உண்பதற்கு சமம் அல்லவா!

கவிஞர் சுமதி தசரதன்,சென்னை

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே! முதலும் தமிழே!!

# நினைவுகளில் நெல்வயல்கள்!

மனத்தினிலே சிறுவயதின் மகிழ்வான நினைவலைகள்!
நினைவலையில் மகிழ்வளிக்கும் பயணித்த சாலைகள்!
சாலையின் இருமருங்கும் பொன்விளையும் வயல்வெளிகள்!
வயல்வெளியில் செழிப்பாக விளைந்திருக்கும் பயிர்வகைகள்!
பயிர்வகையில் அதிகமாக பசுமைமிகு நெற்பயிர்கள்!
நெற்பயிர்கள் விளைவிக்க விதைவிதைக்க நாற்றங்கால்!
நாற்றங்கால் முழுவதிலும் முளைத்திருக்கும் நாற்றுகள்!
நாற்றுகள் தலையசைக்க வீசுகின்ற இளங்காற்று!
இளங்காற்றின் வருடலிலே இதமான நடைப்பயணம்!
நடைப்பயணம் பள்ளிக்கு நாளும் இதமளிக்கும்!
இதமான சூழலிலே வளர்ந்துவிடும் நாற்றுகளும்!
நாற்றுநட உழுது நீருடன் கழனிகள் அழகாக!
அழகாக இடைவெளியில் நடவுநடும் பெண்டிர்கள்!
பெண்டிர்களின் பாட்டொலிகள் எதிரொலிக்கும் வயல்களிலே!
வயல்களிலே வளர்கின்ற நெல்மணிகள் பால்பிடிக்கும்!
பால்பிடிக்கும் பருவத்தே பறந்துவரும் குருவிகளும்!
குருவிகளை ஓட்டுதற்கு பல்வகையாய் ஒலிஎழுப்ப
எழுப்பிய ஒலிகேட்டுக் கூட்டமாய்ப் பறந்தோடும்!
பறந்தோடிய நாட்களிலே விளைந்திடும் நெற்பயிர்கள்!
நெற்பயிர்கள் இடையிடையே வளர்ந்திடுமே களைகள்!
களைகளைக் களைந்து காத்திடுவர் நெற்பயிரை!
நெற்பயிர்கள் முற்றியதும் பொன்னிறத்தில் நெற்கதிர்கள்!
நெற்கதிர்கள் தலைதாழ்த்தி நின்றிருக்கும் அறுவடைக்கு!
அறுவடை முடித்து களம்சேர்ப்பர் போரடிக்க!
போரடித்துப் பிரித்து பதர்விலகத் தூற்றிடுவர்!
தூற்றிய நெல்மணிகள் மூட்டைகளாய் வண்டிகளில்!
வண்டிகளில் வைக்கோலும் வந்துசேரும் வீட்டிற்கு!
வீட்டினிலே வைக்கோல் மாட்டிற்கு உணவளிக்க!
உணவளிக்கும் விளைநிலங்கள் மனைகளாக மாறிடுதே!
மாறியதைக் காண்கையிலே மனவருத்தம் மிகுந்திடுதே!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்

அருகருகே இருக்கும் திருத்தலங்களுக்குச் சென்றார்
இருபுறமும் அடியார்கள் அந்தணர்கள் வந்தார்கள்
விரும்பி சென்ற கோவிகளில் பதிகங்கள் பாடினார்
அரும்புதல்வனை தோளில் சுமந்தார் தந்தை சிவபாதர்

திருநடனம் புரியும் கூத்தனை தரிசிக்க தில்லை வந்தார்
திருநீலகண்ட யாழ்ப்பாணரும் பிள்ளையோடு சேர்ந்தார்
பெருமானுக்கு "கற்றாங் கெரியோம்பி" பதிகம் பாடினார்
அருமையான தரிசனம் மகிழ்ந்து திருமபினார் சீர்காழி .

ஆய சம்பந்தரின் திருப்பாதங்கள் நோகாமல்
தூய முத்தின் சிவிகை சுடர்க் குடை எழிலுடன்
மேய சின்னங்கள் கொண்டு மெய் அன்பர்களோடு
ஏய அந்தணர்கள் பாலகனை தூக்கி வந்தனர்



அந்த ஞானத்து அமுது உண்டு அருள் பெற்ற
செந்தமிழ் ஞான சம்பந்தரின் அருமை கேட்டு
அந்தக் குழந்தையைக் காண சீர்காழி வந்தார்
சிந்தை மகிழ அணைந்தார் திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசர் தன்னைக் காண வருகிறார்
அருந்தவம் செய்தேன் என அகமகிழ்ந்தார்
வருக என வரவேற்றார் சீர்காழி தலைவர்
திருக் கரங்களால் அவர் பாதம் பணிந்தார்

உள்ளத்தில் அன்பும் மேனியில் முதுமையும்
வள்ளிசான உழவாரப் படை கையில் ஏந்தி
கள்ளமில்லா மேனியில் திருநீறும் பூசி
தள்ளாத வயதில் பாலன் பாதம் பணிந்தார்

இருவரும் பல திருத்தலங்களுக்கு சென்றார்கள்
திருப்பதிகங்கள் பாடி ஈசனை வணங்கினார்
திருவாரூர் செல்ல திருநாவுக்கரசர் விரும்பினார்
திருநாவுக்கரசர், பிறவிப்பயன்பெற விடைபெற்றார்.

முத்துச் சிவிகையில் வந்தவர் திருச்சிலா சென்றார்
தத்துவ நாதனை வணங்க திருக்கோயில் வந்தார்
சித்த பிரமையில் கிடக்கும் பெண்ணைக் கண்டார்
பித்தனாக தந்தை கொல்லி மழவன் அருகில் நின்றான்

"சொல்லமுடியாமல் மயங்கி கிடப்பதன் காரணம் என்ன?"
கொல்லி மழவன் ,"என் மகள் நினைவின்றி கிடக்கிறாள்"
அல்லாடும் அவளுக்கு நீறு பூசி, எழுந்திரு ,'' அழைத்தார்
மெல்ல எழுந்த கொடி இடையாள் அவர் பாதம் பணிந்தாள்

இம்மடந்தை யான் பெற்ற பெண் சுய நினவு பிறழ்ந்தவள்
உம்முடைய திருநீற்று மகிமையினால் நலம் பெற்றாள்
எம்ப்ருமானே, "மணி வல கண்டரோ" பதிகம் பாடினார்
வம்பலன் முயலகன் எனும் நோயிலிருந்து காப்பாற்றினார்

(தொடரும்)

கவிஞர் ந.திருக்காமு

# துணிவுடன் இரு

நேரிசை பஃறொடை வெண்பா

அறிவுரை கேட்டிடும் அந்நொடி எல்லாம்
அறிவும் தெளிவாய் அடையும் - செறிவே
இடர்களைக் கண்டால் இடறிக் குழம்பும்
தடுமாறி மீண்டும் தடமும் - முடக்கும்
மனத்தில் சுமையும் மயக்கம் கொடுக்கும்
சினத்தை எழுப்ப சிறையாய் - கனக்கும்
உளமே அறிவாய் உணர்ந்தே தெளிவாய்
தளமாய் பொறுமையும் தாங்கும் - வளமே
நடப்பதை மாற்ற நயந்தே முனைவாய்
கடமைகள் யாவும் கடக்க - உடுத்து
துணிவைத் துணையெனத் தோளினில் ஏற்று
மணியாய் ஒளிர்வாய் மலர்ந்து



கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயமுத்தூர்

# 'தமிழ்க்கடல்' இராய.சொக்கலிங்கனார்

## (கட்டுரை)

**பெற்றோர்** : இராயப்பச் செட்டியார் - அழகம்மை ஆச்சி
**பிறந்த ஊர்** : காரைக்குடியிலுள்ள நாட்டுக்கோட்டை
**காலம்** : 03-10-1898 - 30-9-1974

**சிறப்பு :**



'தமிழ்க்கடல்' என்றும் எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் இராய.சொக்கலிங்கனார் சிறந்த பேச்சாளர். இவர்தம் இலக்கியப் பொழிவு தனித்தன்மை உடையது. பல்லாயிரக்கணக்கான தமிழ் இலக்கியப் பாடல்கள் இவருக்கு மனப்பாடம்.

**படைப்புகள்:**

காந்தியைப் பற்றிச் சிறையிலிருந்தபோது பாடிய, "காந்திப் பிள்ளைத் தமிழ், காந்தி கலித்துறை அந்தாதி, காந்தி நான்மணி மாலை, காந்தி பதினெண்பா ஆகிய இலக்கியங்களை இயற்றியுள்ளார். 'காதற்பாட்டு' என்ற கவிதை நூலையும், 'குற்றால வளம்' (கட்டுரைத் தெகுப்பு) என்ற நூலையும் இயற்றியுள்ளார், இராய. சொ. 'கம்பனும், சிவனும், 'வில்லியும், சிவனும்' என்ற ஆராய்ச்சி நூல்களும், 'திருத்தலப்பயணம்' என்ற நூலையும் இயற்றியுள்ளார்.

**இளமைக்கல்வி:**

அக்கால வழக்கப்படி காரைக்குடியில் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் பயின்றார். இராய.சொ.வின் தந்தையார் பாலக்காட்டில் கொடுக்கல் வாங்கல் தொழிலைச் செய்து வந்தார். அதனால் எட்டு, ஒன்பது வயது வரையில் பாலக்காட்டில் படித்த இராய.சொ.பதின்மூன்றாம் வயதில் பர்மா சென்றார். அங்குச் சில ஆண்டுகள் இருந்து பின் தாயகம் திரும்பினார். பிறகு மூன்றாண்டுகள் காரைக்குடியில் சிதம்பர ஐயரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். 1918 இல் தம் இருபதாவது வயதில் உமையாள் ஆச்சியை மணந்தார்.

# 'தமிழ்க்கடல்' இராய.சொக்கலிங்கனார்

## (கட்டுரை)


**தமிழ்க்கடல்:**

1958ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ஆம் தேதி காரைக்குடி இந்துமதாபிமான சங்கத்தார் இராய.சொ.அவர்களின் மணி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர். அவ்வமயம் இராய.சொவின் ஆழ்ந்தகன்ற தமிழறிவையும், தொண்டினையும் பாராட்டும் வகையில் அவருக்கு 'தமிழ்க்கடல்' என்ற பட்டம் சூட்டி மகிழ்ந்தனர். கம்பன் கழகத் தலைவராக இருந்திருக்கிறார்.

**விடுதலை வேள்வியில் இராய.சொ:**

இராய.சொ.அழுத்தமான நாட்டுப்பற்றாளர். காரைக்குடியில் தேசபக்தர் சுப்பிரமணிய சிவா தேசிய உணர்வை வளர்த்த போது அவருக்கு ஆதரவாக இருந்த நகரத்தார்கள். பலரும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். செட்டிநாட்டு இராஜாராம் மோகன்ராய் என்றழைக்கப்பட்ட சீர்திருத்தச் செம்மல் சொ.முருகப்பா, கம்பன் அடிப்பொடி சா.கணேசனார், வ.வே.சு.ஐயர், சுப்பிரமணிய சிவா, வ.உ.சி. போன்ற பெருமக்களின் தொடர்பால், இராய.சொவும் எழுச்சிமிக்க விடுதலை வீரராகத் திகழ்ந்தார். தமிழ்த்தென்றல் திரு.வி.கவை அரசியல் குருவாகக் கொண்டார்.

1925இல் காங்கிரஸ் மகாசபையில் சேர்ந்து, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினராகவும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினராகவும், காரைக்குடி மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவராகவும் இருந்திருக்கிறார்.



கட்சியின் கொள்கைகளைப் பரப்புவதற்காகவே 'ஊழியன்' என்ற ஓர் இதழை இருபதாண்டுக் காலம் நடத்தினார். ஊழியனின் தொண்டு அன்றைய இதழியல் உலகில் பரபரப்பாகப் பேசப்பட்டது.

# 'தமிழ்க்கடல்' இராய.சொக்கலிங்கனார்

## (கட்டுரை)

**காந்தியடிகளும், இராய. சொவும்:**

இராய.சொ.தீவிரமான காந்தியவாதி. தம்மை 'காந்திக் கிறுக்கர்' என்று அழைத்துக் கொள்வதில் பெருமைப்பட்டவர். காந்தியடிகளின் கொள்கைகளைத் தம் வாழ்வில் கடைப்பிடித்த இராய.சொ. தம் கவிதைகளுக்குப் பாடற்பொருளாகக் காந்தியைக் கொண்டார்.

1934 ஆம் ஆண்டு தென்னிந்தியச் சுற்றுப் பயணத்தின் போது, மகாத்மா காந்தியடிகள் மனமுவந்து இராய.சொ.வின் வீட்டிற்கு வந்து பெருமைப்படுத்தினார்.

**இந்துமதாபிமான சங்கமும், இராய.சொ.வும்:**

சொ.முருகப்பா. இராய.சொ. காந்தி மெய்யப்பர் போன்றோர் அக்கால இளைஞர்களை நல்வழிப்படுத்துதற்காகக் காரைக்குடியில் 1917இல் 'இந்து மதாபிமான சங்கம்' என்ற ஓர் அமைப்பைத் தோற்றுவித்தனர். இந்து சமயத்தைப் பரப்புவதுதான் சங்கத்தின் குறிக்கோள். அதே சமயம் அச்சங்கம் நாட்டிற்கும்,மொழிக்கும் அச்சங்கம் பெரிதும் உழைத்திருக்கிறது.

1919 ஆம் ஆண்டு பாரதியார் இச்சங்கத்திற்கு வருகை புரிந்து சில நாட்கள் தங்கியிருந்து 'இந்து மதாபிமான சங்கத்தின் சேவைகளைப் பாராட்டி ஏழு பாடல்கள் பாடியுள்ளார்.



இச்சங்கம். இச்சங்கத்திற்குப் பாரதியார் வந்திருந்தபோது இராய.சொ, சொ.முருகப்பா போல போன்றோர் பாரதியாருடன் நிழற்படம் எடுத்துக் கொண்டனர். இச்சங்கத்தின் மூலம்தான் இருந்து பாரதியாரின் நிழற்படம் உலகிற்குக் கிடைத்தது.

# 'தமிழ்க்கடல்' இராய.சொக்கலிங்கனார்

(கட்டுரை)

**நகரசபைத் தலைமையும், தொண்டும்:**

1938 முதல் 1941 வரை காரைக்குடி நகரசபைத் தலைவராகப் பதவியில் இருந்த காலத்தில் 17 ஆரம்பப்பள்ளிகள் தோன்றின. தெரு விளக்குப் போடும் திட்டத்தின் கீழ் நீலரச விளக்குகள் ஒளி வீசின. நகரசபைக்கென அலுவலகம் 'காந்தி மாளிகை' என்ற பெயரில் கட்டடப்பட்டது.

**இராய.சொ.வின் புகழும், மறைவும்:**

இராய.சொ.விடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் வள்ளல் அழகப்பர். அவர் விருப்பப்படி அழகப்பா கல்லூரியில் 'தமிழ் ஆராய்ச்சித்துறை' தொடங்கப் பெற்றது. அதன் இயக்குநராக இராய.சொ.நியமிக்கப் பெற்றார். அப்போது உருவானவைதான் 'கம்பனும், சிவனும்', 'வில்லியம் சிவனும், என்ற ஆராய்ச்சி நூல்கள். இராய.சொ.நல்ல நினைவாற்றல் உடையவர். கற்றது மறவாதவர். வள்ளல் அழகப்பரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்ட இராய.சொ.தம் வாழ்நாள் முழுதும் சேகரித்துத் தொகுத்த அரிய பெரிய நூல்களை, அழகப்பா கல்லூரிக்கு நன்கொடையாகக் கொடுத்து மகிழ்ந்தார். அந்நிகழ்ச்சி அழகப்பா கல்வி அறநிலையத்தாரால் ஒரு விழாவாக நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்ட சி.சுப்பிரமணியம், இராயசொ. ஒரு நடமாடும் நூலகம். ஆகவே அவர் நன்கொடை அளித்துள்ள அத்தனை நூல்களும் அவரிடம் குடி கொண்டவை. எனவே, இந்நூலகம் அவருக்குத் தேவையில்லையல்லவா, என்று பாராட்டியுள்ளார்.

தேசியவாதியாக, அரசியல்வாதியாக, காந்தியவாதியாக, ஆன்மீகவாதியாக, பேச்சாளராக, இலக்கியவாதியாக, பதிப்பாசிரியராக, தொகுப்பாசிரியராக விளங்கிய இராய.சொ.30.09.1974 அன்று வீடுபேறு அடைந்தார்.



கவிஞர் அ வில்சன்,இதழாசிரியர்


அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
முடிந்த பிரச்சினைகளை
நினைத்து கவலை
அடைவதை நிறுத்தி விட்டு
வரும் காலத்தை துணிந்து
தன்னம்பிக்கையுடன்
எதிர்த்து நில்லுங்கள்.
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.

தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

agaramuthalaa

aagaramuthala@gmail.com